## டவர் மண்டப தியெட்டர் மன்றம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, டவர் மண்டப தியெட்டர் மன்றம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு முறையான கணக்கேடுகளைப் பேணியுள்ளது எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக் கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர டவர் மண்டப தியெட்டர் மன்றத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்குகளின் சமர்ப்பிப்பு

கணக்காய்வுப் பரிசோதனைகளின் அவதானித்து சுட்டிக்காட்டப்பட்ட ரூபா 2,100,000 கணக்குகளில் குறைத்துக் காண்பிக்கப்பட்டமையைச் சுட்டிக்காட்டியதன் பின்னர் இறுதியான நிதிக்கூற்றுக்கள் சீராக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 24 இன் பிரகாரம் நிதிவடிவத்தில் அல்லாத அரச மானியங்கள் பெறப்படுகையில் உரிய மானியத்தை ஒதுக்கத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியதுடன் பெறப்பட்ட சொத்துக்களின் ஆக்கபூர்வமான ஆயுட்காலம் முழுவதுவும் அப் பெறுமானத்தேய்வுக் கொள்கைக்கு சமனாக ஒதுக்கம் ஆண்டின் இலாபத்திற்கு எதிராக செலவு வைக்கப்படுவதன் மூலம் வருடாந்த வருமானத்திற்கு இனங்காணப்பட வேண்டும். எனினும், டவர் மண்டப தியெட்டருக்கு 2003 ஆம் 2006 ஆம் ஆண்டுகளின் போது பெறப்பட்ட மொத்தப் பெறுமதி ரூபா 44,901,250 ஆன ஒலியமைப்பு

உபகரணங்கள் மற்றும் மோட்டார் வாகனங்களின் 2010 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறும் பெறுமானத்தேய்விடப்பட்ட ரூபா 32,086,849 தொகை அவ்வாறு வருமானத்திற்கு எதிராக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2000 – 2008 காலப்பகுதியின் போது வாழ்க்கைச் செலவினக் கொடுப்பனவு கைவிடப்பட்டு ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை பங்களிப்புத் தொகை கணிப்பிடப்பட்டமையால் மேற்குறித்த காலப்பகுதிக்கு உரித்தான சேவை வழங்குனரின் ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய நிலுவைப் பங்களிப்புத் தொகையாக முறையே ரூபா 2,514,476 தொகையும் ரூபா 502,895 தொகையும் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கிடப்பட்டிருந்த காரணத்தினால் ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 3,017,371 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) கைதவிர்க்கப்பட்ட சொத்துக்கள் விற்பனை செய்யப்படுவதன் மூலம் ரூபா 90,860 தொகை உழைத்திருந்த போதிலும் விற்பனைக்கு உரித்தான சொத்துக்களின் கிரயமும் பெறுமானத்தேய்வும், சொத்துக்கள் கைதவிர்ப்புக் கணக்கிற்கு சீராக்கப்பட்டிராததுடன் அச் சீராக்கங்கள் சொத்துக்கள் மற்றும் பெறுமானத்தேய்வு ஏற்பாடுகள் கணக்குகளுக்கு சீராக்கப்பட்டு கணக்குகள் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.2.3 பெறவேண்டிய கணக்குகள்

(அ) 2006 முதல் 2008 வரையான காலப்பகுதிக்காக ருக்மணி தேவி ஞாபகார்த்த மண்டபத்தில் விரிவுரைகள் நடாத்தப்படுதலுக்காக வெளித்தரப்பினரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 199,280 தொகையான வாடகைக் கட்டணம் மீளாய்வாண்டின் இறுதியின் போதும் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெற வேண்டிய கால வைப்பு வட்டித் தொகையான ரூபா 926,247 தொகை, பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டித் தொகையான ரூபா 758,773 தொகை, மற்றும் பெற வேண்டிய பஸ் வாடகையான ரூபா 38,440 தொகைக்காக மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்கியிராத சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) அரசாங்க நிதிப் பிரமாணங்கள் 371(2) மற்றும் 371(2)(அ) | (i) ஓர் குறித்த செயற்பாட்டிற்காக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் துணைக்கட்டுநிதிகள் அச் செயற்பாடு முடிவுற்ற பின்னர் தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் 5 உத்தியோகத்தர்கள் அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் 26 நாட்கள் முதல் 150 நாட்களாக தீர்க்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. |
| | (ii) 2010 பெப்ரவரி 22 ஆம் திகதியும் மார்ச் 03, 10 ஆம் 16 ஆம் திகதிகளில் 22 சந்தர்ப்பங்களின் போது ஒரே உத்தியோகத்தருக்கு நிதிப் பிரமாணத்திற்கு முரணாக ரூபா 20,000 தொகையான ஆகக்கூடிய எல்லைக்கு மேலாக துணைக்கட்டுநிதி வழங்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு வழங்கப்பட்டிருந்த முற்பணங்களின் மொத்தக் கூட்டுத்தொகை ரூபா 890,000 ஆகக் காணப்பட்டது. |
| நிதிப் பிரமாணங்கள் 756 உம் 757 | மன்றத்தினால் 2010 ஆம் ஆண்டிற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2003 ஜுன் 02 ஆந் திகதிய பி.ஈ.டீ./12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9:3 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் இறுதி வரை அங்கீகரிக்கப்பட்ட தாபன அமைப்பு மற்றும் சம்பள மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு மன்றத்தின் பதவியணி ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு தொடர்பான நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2008 யூன் 26 ஆம் திகதிய 13/ 2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 9 ஆம் பந்தி | டவர் மண்டப தியெட்டர் மன்றத்தின் கணக்காளரும் சிரேஷ்ட முகாமையாளர் (தியெட்டர்) எனும் பதவிக்காக மாதாந்த எரிபொருட் கொடுப்பனவாகப் பொறுப்பு நிதியத் தீர்மானத்தில் ரூபா 13,800 படி செலுத்தப்பட்டிருந்ததுடன் இதற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

### 2.1.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான டவர் மண்டப தியெட்டர் மன்றத்தின் நிதிவிளைவுகள் ரூபா 8,455,736 தொகையான பற்றாக்குறை இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,421,609 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நிதிசார் விளைவுகளில் ரூபா 10,877,345 தொகையான வீழ்ச்சிக்காக அரசாங்கத்தினால் பெறப்பட்டிருந்த மானியம் ரூபா 4,980,000 தொகையால் குறைவடைந்து செயற்பாட்டுச் செலவினம் ரூபா 7,693,734 தொகையால் அதிகரித்தமை வீழ்ச்சிக்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

### 2.1.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்

2007 ஆம் ஆண்டின் போது ஆக்கத்திறனான நாடகத் தயாரிப்பிற்காக நிதி உதவி வழங்கலின் கீழ் நாடகத் தயாரிப்பாளர்களுக்கு நாடகம் ஒன்றைத் தயாரிப்பதற்காக மன்றத்தினால் ரூபா 194,000 தொகையான நிதியுதவி வழங்கப்பட்டிருந்தது. அவ் உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் நாடகக் காட்சித் தொடர்களில் இருந்து மன்றத்திற்கு அறவிடப்பட வேண்டியிருந்த தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் உதவியாக வழங்கப்பட்டிருந்த தொகையும் இதற்காக செலவிடப்பட்ட ரூபா 29,530 தொகையான ஏனைய செலவினமும் உள்ளடங்கலாக ரூபா 223,530 கூட்டுத்தொகை முறையான அதிகாரப் பொறுப்பின்றி 2010 ஆம் ஆண்டின் போது செலவினத்திற்கு பதிவழிக்கப்பட்டிருந்தது.

மேற்குறித்த தொகையை கணக்குகளில் இருந்து பதிவழிப்பதற்காக நிதிப் பிரமாணம் 113(3) இன் பிரகாரம் அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிராததுடன் இது தொடர்பாக கட்டுப்பாட்டுச் சபையும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 திட்டமிடலும் செயலாற்றுகையும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஏற்பாடுகள் தடுக்கப்பட்டு செயற்பாட்டுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட 11 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதில்லை என 2010 செப்தெம்பர் 07 ஆம் திகதிய முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஏற்பாட்டுத்திருத்தம் ஆகஸ்ட் மாதத்தின் போதே ஏற்பட்டிருந்தமையால் அச் செயற்திட்டங்களின் முதல் காலாண்டிற்கு உரித்தான நடவடிக்கைகளின் முன்னேற்றத்தைக் காண்பிக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இரண்டாம் காலாண்டு முடிவின் போது 3 நாட்டிய நாடகங்கள் நடாத்தப்படுவதற்கும் 6 நாட்டியங்களை காட்சிப்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஒரு நாட்டிய நாடகம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்த போதிலும் ஒரு நாட்டியமேனும் காட்சிப்படுத்தப்படடிருக்கவில்லை.

(ii) நாட்டிய மற்றும் அபினயக் கலை நூலக அபிவிருத்திக்காக ஒரு அலுமாரியும் 50 நூல்களும் கொள்வனவு செய்யப்படுவதற்கு இரண்டாம் காலாண்டிற்காக ரூபா 150,000 தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றைக் கொள்வனவு செய்திருக்கவில்லை.

(iii) நாட்டிய மற்றும் அபினயக் கலைகள் தொடர்பான காட்சி ஒன்று முதலாம் காலாண்டின் போது நடாத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இது நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்பாட்டுத்திட்டத்தின் பிரகாரம் கலைஞர்களை ஞாபகார்த்தப்படுத்தும் படைபுகளின் ஊக்கப்படுத்தும் 10 விழாக்களுக்காக ரூபா 500,000 தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2010 ஆகஸ்ட் வரையான நிதிச் செயற்பாட்டறிக்கையின் பிரகாரம் 2 விழாக்களுக்காக மாத்திரம் ரூபா 864,406 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) 2010 ஆம் ஆண்டின் போது மன்றத்தின் நோக்கங்கள் அடையப்படுவதற்காக அடையப்பட்ட பௌதீகச் செயற்பாட்டை எய்துவதற்காக போதிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

(அ) 2006 செப்தெம்பர் 22 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கை இல. 30 இன் ஏற்பாடுகளுக்கு இணங்கும் வகையில் டவர் மண்டப தியெட்டர் மன்றப் பதவியணியும் சம்பளங்கள் மற்றும் ஆளணிக்கோப்பு சபையின் பரிந்துரைக்கு இணங்கும் வகையில் புதிய பதவிகளுக்கும் புதிய சம்பளத் திட்டங்களுக்கும் உள்ளீர்க்கப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் நிறுவகத்தினால் அந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 ஆம் 2009 ஆம் ஆண்டுகளிற்குரித்தான ஆண்டறிக்கை 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2008 செப்தெம்பர் 01 ஆம் திகதி முதல் டவர் மண்டப தியெட்டர் மன்றம் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக மூடப்பட்டிருந்ததுடன் புனரமைப்பு நடவடிக்கைகள் தாமதமாவதன் காரணமாக 2010 ஆம் ஆண்டிற்கு ரூபா 1,488,000 ஆக மதிப்பிடப்பட்டிருந்த மண்டபத்தின் வருமானத்தை நிறுவகம் இழந்திருந்தது.

### 2.2.3 நிதிகளின் குறைவான பயன்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மன்றத்திடம் இருந்த இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கில் வருடம் முழுவதும் ரூபா 9 மில்லியனுக்கு மேலான தொகை காணப்பட்டதுடன் அப் பணத்தொகையை ஆக்கபூர்வமான வகையில் பயன்படுத்துவது தொடர்பான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நீர்கொழும்பு இலங்கை வங்கியின் நடைமுறைக் கணக்கில் ரூபா 1 மில்லியன் தொகையான மீதி 2009 ஆகஸ்ட் முதல் 2010 திசெம்பர் 31 வரை பயனற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 பயன்பாடற்ற சொத்துக்கள்

2008 ஏப்ரல் 03 ஆம் திகதிய 223 ஆம் இலக்க நம்பிக்கை பொறுப்பு சபைத் தீர்மானத்தின் பிரகாரம் 17 – 2560 ஆம் இலக்க வாகனத்தை கைதவிர்ப்பதற்காக தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதிலும் 2010 செப்தெம்பர் 27 இல் உள்ளவாறும் கைதவிர்க்கப்பட்டிராததுடன் கைதவிர்ப்புச் சபை ஒன்றேனும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. 2010 திசெம்பர் இல் உள்ளவாறும் அவ் வாகனம் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

(அ) 2007 ஆகஸ்ட் 27 ஆம் திகதி நடாத்தப்பட இருந்த ''பெரதிக தருபெல பிரசங்கய'' எனும் கலைஞர்களின் விழாவிற்காக ரூபா 30,000 தொகை செலுத்தப்பட்டு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந் நிகழ்ச்சி நடாத்தப்பட முடியாதிருந்ததுடன் குறித்த காலத்தில் முற்பணத் தொகை மீள அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையால் அத் தொகை நிறுவகத்தின் செலவினமாக பதிவழிக்கப்பட நேர்ந்திருந்தது.

(ஆ) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய உதவு தொகை குறித்த தினத்திற்கு அனுப்பி வைக்க முடியாத காரணத்தினால் 2000 ஆம் ஆண்டு முதல் 2008 ஆண்டு காலத்திற்கு உரித்தாக ரூபா 251,447 தொகையான மிகைக்கட்டணம் 2011 மார்ச் மாதம் செலுத்தப்பட்டிருந்தது.

### 2.2.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) 2010 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீடு மற்றும் உள்ளபடியான மீதிகளுக்கு இடையே 31% முதல் 587% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் போது கலையகத்தை வாடகைக்கு வழங்கியதன் மூலம் ரூபா 500,000 தொகையான வருமானத்தை உழைப்பதற்கு மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2010 இல் 8 மாதங்கள் கடந்திருந்த போதிலும் உழைக்கப்படுவதற்கு மதிப்பீட்டு வருமானத்தின் 16% ஆன ரூபா 80,470 மாத்திரமே உழைக்கப்பட்டிருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்.

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) செயல் நடவடிக்கைத் திட்டங்களை அமுல்ப்படுத்தல்

(ஆ) ஊழியர்களை சேர்த்துக் கொள்ளலும் பதவிஉயர்வுகளை வழங்குதலும்

(இ) நிதிக் கட்டுப்பாடு

(ஈ) முற்பணம் மீதான கட்டுப்பாடு

(உ) வாகனப் பயன்பாடும் எரிபொருள் நுகர்வும்.